***IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR.***

***MCOP.NO. 143/ 2025***

*Deposition of PW - 1 solemnly affirmed by S.Vidya Priya, Bench Clerk Grade-II of this court on 14.07.2026 in accordant with provisions of XLIV of 1989.*

| | | | |
|---|---|---|---|
| *Name* | : **ஹரிஹரன்** | *Age* | : |
| *Father's Name* | : | *Village* | : |
| *Calling* | : | *Taluk* | : |

**2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தற்போது ஓட்டுநராக பணிபுரிகின்றேன். ஆக்டிங் டிரைவராக வேலை செய்து வருகின்றேன். சுமார் 5 வருடங்களாக ஆக்டிங் டிரைவராக பணிபுரிகின்றேன். விபத்திற்கு பின்பும் நான் அந்த பணியில் இருக்கின்றேன். விபத்து சமயத்தில் நான் இரு சக்கர வாகனத்தில் பயணம் செய்தேன் என்றால் சரிதான். நான் தலை கவசம் அணிந்து பயணம் செய்ததாக மனுவில் சொல்லவில்லை. முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் நான் தலை கவசம் அணிந்து பயணம் செய்திருந்தால் தலையில் காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. விபத்து நடைபெற்றபோது பகல் 1.30 மணி இருக்கும்.

நான் ஆக்டிங் டிரைவராக கார் ஓட்டிய பின்பு நான் எனது இரு சக்கர வாகனத்தில் சென்று கொண்டிருந்தபோது விபத்து ஏற்பட்டது. காவல்துறை தயார் செய்துள்ள மாதிரி வரைபடத்தில் சாலையின் நடுவில் விபத்து ஏற்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தொடர்ச்சியாக துாக்கமில்லாமல் கார் ஓட்டி விட்டு இரு சக்கர வாகனத்தில் சென்றபோது அயற்ச்சி காரணமாக அஜாக்கிரதையாக வாகனத்தை ஓட்டி விபத்தை வரவழைத்தேன் என்றால் சரியல்ல. நான் கவனக்குறைவு ஏற்படுவதாக பிரமாண வாக்குமூலத்தில்சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அவ்வாறு உண்மையில் ஏற்பட்டால் நான் ஆக்டிங் டிரைவராக பணி செய்ய முடியாது என்றால் சரியல்ல.

என் மீது மோதியதாக சொல்லும் வாகன ஓட்டுநருக்கு முறையான ஓட்டுநர் உரிமம் இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. எனக்கு அதிகப்படியான காயங்கள் ஏற்படவில்லை என்றும், விபத்தினால் எனக்கு எந்த பொருள் இழப்பும் ஏற்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் தாக்கல்செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எதிரில் வந்த வாகனம் பெரிய வாகனம் என்பதால் அந்த வாகனத்தின் ஓட்டுநரின் மீது தவறாக பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. விபத்து கார் ஓட்டுநரின் அஜாகக்ரிதையால் ஏற்படவில்லை என்றும், எனவே 2-ம் எதிர்மனுதார் இழப்பீடு வழங்க கடமைப்பட்டவர் அல்ல என்றும், 2-ம் எதிர்மனுதாரரைப் பொருத்து மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்<br>கரூர் |